# தந்தி

இல- 1088 · 1970 ஜுலை 22 புதன்கிழமை ★ விலை சதம் 5



University of Jaffna Sri Lanka
RECEIVED
8
Periodicals Division
Library


## யூனியன்களின் யோசனையை மந்திரி ஏற்ருர்

# தந்திகள் பிந்தாமல் வந்து சேரத்திட்டம்

**தந்திகள் தபாலில் அனுப்பப்படுவதைத் தவிர்ப்பதற்கு தபால் திணைக்களத்தைச் சேர்ந்த நான்கு தொழிற்சங்கங்கள் சமர்ப்பித்த ஒரு திட்டத்தை தபால், தந்தி அமைச்சர் செனட்டர் செ. குமாரசூரியர் ஏற்றுள்ளார்.**

தொழிற் சங்கங்கள் தெரிவித்துள்ள யோசனைகளை ஏற்று இன்று முதல் மூன்று மாத காலத்துக்கு அவற்றை அமுல் செய்யும்படியும், திருப்தியாக சேவை நடைபெற்ருல் ஏனைய பகுதிகளுக்கும் இத் திட்டத்தை விரிவாக்குமாறும் அமைச்சர் உத்தரவிட்டு உள்ளார்.

தொழிற் சங்கங்களின் யோசனைகள் வருமாறு:-

★ இப்போது போல் கோட்டையில் உள்ள புதிய கட்டடத்தில் சோதனை அறையை வைத்து ஊழியர்களை பழைய கட்டடத்தில் வைப்பதற்குப் பதிலாக பழைய கட்டடத்தில் புதிய சோதனை அறை ஒன்றை அமைத்தல்.

★ டெலிபிரின்டர்களில் வேலை செய்வதற்கு நிரந்தரமாக ஊழியர்களை நியமித்தல்.

★ களுத்துறை முதல் மாத்தறை வரையிலான தந்திக் கம்பிகளை அடிக்கடி ஒவ்வொரு பத்து மைல் தூரத்திலும் பரிசோதிப்பதற்கு ஏற்பாடு செய்தல். (ஐ)

### பிரதமரின் பிரேரணை நிறைவேறியது

அரசியல் அமைப்பு நிர்ணய சபையை உருவாக்கக் கோரும் பிரதமரின் பிரேரணை நேற்று நாடாளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேறியது.

உறுப்பினர்கள் சகலரும் எழுந்து நின்று பலத்த கரகோஷத்துக்கிடையே தீர்மானத்தை நிறைவேற்றினர். (ஐ-6)



விக்கி பிளேன் ஒரு முன்னணி மொடல் அழகி. சினிமாப் படம் ஒன்றில் ஒரு சிறந்த பாகமேற்று நடிக்கும் வாய்ப்பை இவர் இழந்து விட்டார். ஏன் தெரியுமா? இவருடைய உடல் அளவுகள் அளவுக்கு மிஞ்சிவிட்டதுதான்- விக்கி என்ன செய்வார்? (ஐ)

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, ஜுலை 22

நேற்று மாலை இழுக்கப்பட்ட 308-வது தேசிய சுவீப்பில் முதல் மூன்று பரிசுகளையும் பெறும் டிக்கட்டுகள் விபரம் வருமாறு:-

முதலாம் பரிசு

**15 J 0463**

ரூபா 88,190

இரண்டாம் பரிசு

**20 T 0088**

ரூபா 35,276

**16 V 0269**

மூன்ரும் பரிசு

ரூபா 8,819

(4-ம் பக்கம் பார்க்க)

## திடீர் சோதனைக் குழுவை கண்டு கடைக்காரர் ஓட்டம்

கொள்ளுப்பிட்டிச் சந்தியில் திடீர் பரிசோதனைக் குழு புகுந்த போது கசாப்புக் கடைக்காரர் ஒருவர் தனது கடையில் இருந்த 151 ருத்தல் இறைச்சியையும் தனது பணத்தையும் விட்டு ஒரே ஓட்டமாக வெளியே ஓடினர்.

இந்தச் சம்பவம் திங்கட்கிழமை மாலை 5-00 மணியளவில் நடைபெற்றது.

திடீர் பரிசோதனைக் குழுவைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் இக்னேஷியஸ் பெரேராவும், சப் இன்ஸ்பெக்டர் மேர்வின் பெர்ணண்டோவும், கான்ஸ்டபிள்களும் இந்த திடீர் சோதனையை நடத்தினர்.

சம்பந்தப்பட்ட கசாப்புக் கடையின் சொந்தக்காரர் பற்றிய விபரம் எதுவும் கிடைக்காததால் பரிசோதனைக்குழு அங்கிருந்த இறைச்சியையும் ரூபா 36-62 ரொக்கத்தையும் சந்தை மேற்பார்வையாளர் முன்னிலையில் கைப்பற்றியது. இறைச்சி கொழும்பு முனிசிப்பல் மாஜிஸ்திரேட் திரு. ஏ. நவரத்தினத்தின் வீட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டு அவர் முன் ஆஜர் செய்யப்பட்டது.

இறைச்சியை மிருகக்காட்சி சாலையில் உள்ள மிருகங்களுக்கு உணவாக்குவதற்கு அனுப்பி வைக்கும்படி உத்தரவிடுமாறு இன்ஸ்பெக்டர் பெரேரா கேட்டார்.

கசாப்புக் கடைக்காரரை இப்போது கண்டு பிடித்துள்ளதாகவும், அவர் மீது விரைவில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என்றும் தெரிகிறது. (ஐ)

## மீனம்பாக்கத்தில் கருணாநிதிக்கு பெரும் வரவேற்பு

சென்னை, ஜுலை 21

ஐரோப்பாவில் 20 நாள் சுற்றுப் பிரயாணம் செய்து விட்டு இன்று சென்னை திரும்பிய தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதிக்கு மீனம்பாக்கம் விமான நிலையத்தில் பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

முதலமைச்சர் வந்த விமானம் இன்று பிற்பகல் 2.10 மணிக்கு இறங்கிய போது தமிழக கவர்னர் சர்தார் உஜ்ஜல்சிங், அமைச்சர்கள் ஆகியோர் திரு. கருணாநிதிக்கு மலர்மாலைகளை அணிவித்தார்கள்.

திரு. கருணாநிதி திறந்த ஜீப் ஒன்றில் ஏறி சேரணிப் படையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்ருர். (ஐ)

### மீனாட்சி



என்னுங்க, சட்டைச் சாக்கைத் தட்டிப் பார்க்கின்றீர்கள்?

'ஆமாங்க, இந்த டாக்ஸி மீட்டர்கள் ஓடும் வேகத்திற்குப் பணம் உருளுமா என்று பார்க்க வேண்டாமா?

### கூச்சலிட்டால் வெட்டுவதாக பயமுறுத்தினர்

# வாள் முனையில் என்னை எதிரி கற்பழித்தார்

## பத்தொன்பது வயது இளம் பெண் சாட்சியம்

அநுராதபுரம், ஜூலை 21

முதலாவது எதிரி அன்று இரவு என்னிடம் வருவார் என்று நான் எதிர்பார்க்கவில்லை- முதலாவது எதிரி என்னுடன் இருமுறை உடலுறவு கொண்டார்- கூச்சலிட வேண்டாம் என்றும், அப்படிச் செய்தால், என்னை ஒரு வாளால் வெட்டுவதாகவும் அவர் பயமுறுத்தினர்- என்னுடன் உடலுறவு கொள்வதற்கு முன் அவர் என்னைப் பயமுறுத்தினர்-

பண்டாரமெனிக்கா, கற்பழிப்பு வழக்கு அனுராதபுரம் மேலதிக மாஜிஸ்திரேட் திரு- மேர்வின் விஜேசிங்க முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது வழக்கறிஞரின் கேள்விகளுக்குப் பதில் அளித்த ஆர்- பண்டாரமெனிக்கா என்ற 19 வயது இளம் பெண் மேற்கண்ட விபரங்களைக் கூறினர்-

தனது ஒன்றுவிட்ட சகோதரியான வாரியப்பொலையைச் சேர்ந்த ஆர்- பண்டாரமெனிக்கா என்ற 19 வயது பெண்ணைக் கற்பழித்ததாக இந்த வழக்கில் ஆர்- எம்- திஸாநாயக்கா என்பவர் மீது குற்றம் சாட்டப்பட்டு உள்ளது- இந்தக் குற்றத்தைச் செய்வதற்கு உடந்தையாக இருந்ததாக முதலாவது எதிரியின் தாயார் ரம்மெனிக்கா மீது குற்றஞ் சாட்டப்பட்டு உள்ளது-

வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்தபோது சாட்சி ஆர்- பண்டாரமெனிக்கா கூறியதாவது—

"கலன்பிந்துனுவெவயில் இரண்டாவது எதிரியின் வீட்டில் எனது தந்தை ஒரு கடைஆரம்பித்தார்- முதலாவது எதிரி என் தந்தையின் கீழ் கடையில் வேலை செய்தார்-

"சம்பவம் நடைபெறுவதற்கு நான்கு தினங்களுக்கு முன் என் தந்தை என்னை அங்கு விட்டு, பொருள்கள் வாங்குவதற்குச் சென்றார்-

"எனது தாயாருக்கும் இரண்டாவது எதிரிக்கும் இடையிரி மனத் தாங்கல் இருந்து வந்தது- இருவரையும் சமாதானம் செய்வதற்கு என் தந்தை விரும்பினர்- நாங்கள் இரண்டாவது எதிரியின் வீட்டில் இருப்பதை என் தாயார் விரும்பவில்லை-

"சம்பவத்தன்று இரண்டாவது எதிரி ஓர் அறையில் நித்திரை செய்தார்- நான் வேறோர் அறையில் நித்திரை செய்தேன்- இரண்டாவது எதிரியின் குழந்தைகளும் என்னருகில் நித்திரை செய்தனர்- நான் படுத்திருந்த அறைக்கு அடுத்த அறையில் படுத்தார்- அன்றிரவு நானே சமையல் செய்தேன்-"

மாஜிஸ்திரேட்— உமது தகப்பன் உம்மை எதற்காக இரண்டாவது எதிரியின் வீட்டில் விட்டுச் சென்றார் என்று உமக்குத் தெரியுமா?

சாட்சி— ஏனென்றால் அவர் பொருள்கள் வாங்கப் போனார்-

மாஜிஸ்திரேட்— எவ்வளவு காலம் உம்மை அங்கு தங்கச் சொன்னார்?

சாட்சி— அவர் திரும்பி வரும் வரை-

மாஜிஸ்திரேட்— அங்கேயே நீர் தங்க வேண்டும் என்ற கருத்தில் தானே?

சாட்சி— ஆம்-

மாஜிஸ்திரேட்— உம்மை உமது தந்தை எதற்காகக் கடையில் விட்டார் என்பதற்குக் காரணம் கூற முடியுமா?

சாட்சி— கடை ஒரு ஹோட்டலாக்கப்பட இருந்ததால் சமையல் செய்வதற்காக-

"முதலாவது எதிரிக்கு என்னைத் திருமணம் செய்து வைக்கும் நோக்கம் என் தந்தைக்கு இருந்ததா என்று எனக்குத் தெரியாது- முதலாவது எதிரி அன்று என்னிடம் வருவார் என்று நான் எதிர்பார்க்கவில்லை- முதலாவது எதிரி என்னுடன் இரு முறை உடல் உறவு கொண்டார்- கூச்சலிட வேண்டாம் என்றும், அப்படிச் செய்தால் என்னை ஒரு வாளால் வெட்டுவதாகவும் அவர் பயமுறுத்தினர்- என்னுடன் உடலுறவு கொள்வதற்கு முன் அவர் என்னைப் பயமுறுத்தினர்'' என்று சாட்சி மேலும் சொன்னார்-

மூன்று நாட்களின் பின் தனது தந்தையும் தாயும் திரும்பி வந்த பின் தான் பொலீஸில் புகார் செய்ததாக சாட்சி கூறினர்-

இந்தக் கட்டத்தில் மேல் விசாரணை 21- 8- 70 வரையில் ஒத்தி வைக்கப்பட்டது- (ஐ)

## தேங்காய்விழுந்து சிறுமி மரணம்

சாய்ந்தமருது, ஜூலை 21

பாடசாலைக்குச் சென்ற 6 வயதுச் சிறுமி பாடசாலை வளவில் வைத்து தலையில் தேங்காய் விழுந்து மரணமானாள்.

இச் சம்பவம் நிந்தவூர் தொகுதியைச் சேர்ந்த காரைதீவு மகளிர் பாடசாலை ஒன்றில் நடைபெற்றது.

சரோஜா என்ற மாணவியே இவ்வாறு பரிதாபமாக இறந்தார். இரத்தம் பீறிட்டொழுக மேற்படி மாணவி சிகிச்சைக்காக மட்டக்களப்பு அரசினர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு சில மணி நேரத்தின் பின் மரணமானார்.

விசாரணை நடாத்திய மரண விசாரணை அதிகாரி திரு. ஜெபநாயகம் விபத்திஞல் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

(ஐ—281)

## வாடகைக் கார் மீட்டர்களை சோதனையிடுவதற்குக் குழு

வாடகைக் கார் மீட்டர்களில் மோசடி செய்து உரிய கட்டணத்தை விட மேலதிகமான கட்டணம் அறவிடும் வாடகைக் கார் சாரதிகளைப் பிடிப்பதற்கு விசேஷ பரிசோதகர் குழு ஒன்றை நியமிப்பதற்கு போக்குவரத்து அமைச்சர் திரு. லெஸ்லி குணவர்தன முடிவு செய்துள்ளார்.

இது சம்பந்தமான பரிசோதகர் குழுவை நியமிக்கும் பொறுப்பு இன்றோ நாளையோ அமைச்சரால் மோட்டார் வாகனக் கமிஷனரிடம் ஒப்படைக்கப்பட உள்ளது.

கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் வாடகைக் கார் மீட்டர்களைச் சோதனையிட்டு தப்பான முறையில் கட்டணம் அறவிடுவதற்கு மீட்டர்களைப் பொருத்தி உள்ள சாரதிகள் சகலரையும் கண்டு பிடித்து அவர்களுடைய கார் ஓட்டும் லைசென்ஸ்களை தற்காலிகமாகத் தடை செய்தல், வாடகைக் கார் லைசென்ஸ்களைத் தடை செய்தல் அல்லது ரத்துச் செய்தல் போன்ற தண்டனைகளை வழங்குவதற்கு மோட்டார் போக்கு வரத்துத் திணைக்களம் நடவடிக்கை எடுக்கும்.

புதிதாக கொடுக்கப்பட்டுள்ள 5 ஸ்ரீ தொடர்பிலக்கங்களை உடைய வாடகைக் கார்களின் புதிய மீட்டர்களின்படி ஒரு மைலுக்கு அறவிடப்படும் கட்டணம் 90 சதமாகும் என்று மோட்டார் போக்கு வரத்துத் திணைக்களத்துக்குத் தெரிய வந்துள்ளது. இதைவிட அதிக கட்டணம் அறவிடும் வாடகைக் கார் சாரதிகளுக்கு தண்டனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

உத்தேச சோதனைக் குழுவில் சுமார் ஏழு பேர் அங்கம் வகிக்கச் செய்யவும், இக் குழு திடீரென்று பாய்ந்து வாடகைக் கார் மீட்டர்களைச் சோதனையிடுவதற்கான அதிகாரம் வழங்குவதற்கும் அமைச்சு மோட்டார் போக்கு வரத்துத் திணைக்களத்துக்கு உத்தரவிட இருக்கிறது. (ஐ)

## பல லட்சம் பெறுமதியான எண்ணெய் மோசடி அம்பலம்

சுமார் 10 லட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான எண்ணெய் வகைகள் இலங்கை பெட்ரோலியம் கூட்டுத்தாபனத்தின் எண்ணெய்க் குதத்திலிருந்து கள்ளத்தனமாகக் கடத்தப்பட்டு விட்டதாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த மூன்று வருடங்களாக இந்த மோசடி நடைபெற்று வருவதாக நம்பப்படுகிறது. கூட்டுத்தாபனத் தலைவர் திரு. ஈ. ஆர். எஸ். ஆர். குமாரசாமி இரகசியப் பொலீசாரிடம் விஷயத்தை ஒப்படைத்திருக்கிறார். அவர்கள் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

கூட்டுத்தாபனத்தின் கணக்குப் பிரிவினர் கடந்த ஏப்ரல்—மே மாதத்துக்குரிய எண்ணெய் இருப்பைத் திடீரென்று கணக்கெடுத்த போதே மோசடியைக் கண்டு பிடித்துள்ளனர்.

எண்ணெய்க் குதத்தில் டீசல் எண்ணெய், மசகு எண்ணெய், எஞ்சின் எண்ணெய், பிரேக் எண்ணெய் முதலானவை விநியோகத்துக்குத் தயாராக வைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

ஒரு லட்சத்து மூவாயிரம் கலன் எஞ்ஜின் எண்ணெய் டின்களைக் குதத்தில் காணவில்லையாம். அவற்றிற்கு கணக்கு வழக்கும் இல்லை.

ஒரு கலன் எஞ்ஜின் எண்ணெயின் விலை ரூபா 10 ஆகும். இதன்படி பார்த்தால் 10 லட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான எஞ்ஜின் எண்ணெய் கையாடப்பட்டு விட்டது.

கூட்டுத்தாபனத் தலைவர் திரு. ஈ- ஆர். எஸ். ஆர்- குமாரசாமி விஷயத்தைப் பொலீசாரிடம் ஒப்படைத்ததோடு மோசடி பற்றி விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்க கணக்குப் பகுதியைச் சேர்ந்த நால்வர் கமிட்டி ஒன்றை நியமிக்குமாறு கூட்டுத்தாபனத்தின் நிர்வாக டைரக்டரைப் பணித்திருக்கினர். (ஐ)

## சங்கம் உதயம்

ஐ. தொ. கா. சம்பள உத்தியோகத்தர்கள் சங்கம் இம்மாதம் 18-ம் திகதி நாவலப்பிட்டிய நகரில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இச் சங்கத்தின் முதல் கூட்டம் நாவலப்பிட்டியில் நடைபெற்றது.

பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. ஏ- என். மணி (கொழும்பு) உபதலைவர்கள்: திருவாளர்கள் ஆர். ஆர். சமாதானம் (எட்டியாந்தோட்டை) எம். தம்பு (பதுளை) திருமதி. பேர்ல். திசநாயக்கா (கொழும்பு) பொதுச் செயலாளர்: திரு. எம். பாக்கியநாதன் (கண்டி) உதவிச் செயலாளர்கள்: திருவாளர்கள் எஸ். பரஞ்சோதி (தலவாக் கொல்லை) கே. எம். கந்தையா (அக்குரப்பத்தனை). பொருளாளர் திரு. ஆர். வரதராசா (கொழும்பு) உதவிப் பொருளாளர்: பி. இராஜரட்ணம் (நுவரெலியா).

கமிட்டி உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ)

## மோட்டார்சைக்கிள் திருட்டு

மஸ்கெலியா, ஜூலை 21

பூட்டி வைத்திருந்த கார் கராஜைத் திறந்து அங்கிருந்த மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ள சம்பவம் ஒன்று பற்றி மஸ்கெலியா பொலீஸார் புலன் விசாரணைகளில் ஈடுபட்டு உள்ளனர்.

சாமிமலையை அடுத்த அழுக்குவத்தைத் தோட்டத்திற்குச் சொந்தமான மோட்டார் சைக்கிளை, தோட்ட நிர்வாகம் தோட்ட மருத்துவ அதிகாரிக்கு வழங்கி இருந்தது. வழமைபோல் ஓடிவிட்டு தி[illegible] கராஜியில் கொண்டுவந்து வைத்துப் பூட்டிவிட்டு வீட்டிற்குச் சென்று விட்டார் வைத்திய அதிகாரி. ஆனல், காலையில் கராஜி[illegible] சென்றபோது, பூட்டுத் திற[illegible] பட்டு மோட்டார் சைக்கிள் [illegible]டப்பட்டு இருந்ததாம். (ஐ—[illegible]

## சீராக்கி அமைக்கவும்

ஒரு அரசாங்க அலுவலகத்தில் அறுபத்தாறு மேலுத்தியோகத்தர்களும், நாற்பத்தொரு கிளாக்குமாரும் இருப்பதாக ஒரு புதினச் செய்தி தெரிவிக்கின்றது- இவர்களுக்கு ஆண்டுக்கு அளிக்கப்படும் வேதனமும் ஏழரை லட்சம் ரூபா-ாம்- எனவேதான் நாற்பத்தொரு கிளாக்குமார் உள்ள இடத்தில் இத்துணை மேலுத்தியோகத்தர்கள் வேண்டுமா என்ற கேள்வி இப்போது எழுந்துள்ளது- பொது நோக்கிற்கு நியாயமான கேள்வியாகவே தோன்றுகின்றது- இந்நிய மனங்கள் முன்னைய ஆட்சிக் காலத்தில் நடந்ததாயினும் பரிசீலனை செய்வது நல்லது- அதன் பின்பு ஊதாரித்தனமின்றித் திருத்தியமைத்துக் கொள்ளலும் வேண்டும்- மேலும் இத்தகைய "திருக்கூத்துக்கள்" வேறிடங்களில் நிகழ்ந்திருந்தாலும் புதிய அரசு அவற்றைச் சீராக்கி அமைத்துக் கொள்ளல் வேண்டும்-

தந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐந்து மாதக் கர்ப்பிணியாக இருந்தேன்

# படம் பார்க்க அழைத்து அறையினுள் விட்டார்

### கருச்சிதைவு வழக்கில் பெண் சாட்சியம்

"நான் சுமார் ஐந்து மாதக் கர்ப்பிணியாக இருந்தேன்- அப்போது அவர் என்னை படம் பார்க்கப் போக அழைத்தார்- நான் அவருடன் சென்றதும் என்னை அவருடைய வீட்டுக்குக் கூட்டிச் சென்று தனது அறையில் விட்டார்- படம் பார்க்கப் போகவில்லை-"

கம்பஹா மேலதிக மாஜிஸ்திரேட் திரு. ஜே- ஏ- சி- அகுஸ்தின் டி சில்வா முன்னிலையில் விசாரணைக்கு வந்த ஒரு கருச்சிதைவு வழக்கில் சாட்சியமளித்த முறைப்பாட்டுக்காரர் இவ்வாறு கூறினர்.

கடந்த வருடம் ஜனவரி 13-ம் தேதி மடுவேகெதர பி. பியசீலி என்பவரின் கருவைச் சிதைத்ததாக கிரிந்திவெலையைச் சேர்ந்த டபிள்யூ- யூ. டி. சிரிசேன என்பவர் மீது இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டு உள்ளது. இந்தக் குற்றத்தை செய்வதற்கு சிரிசேனவுக்கு உடந்தையாக இருந்ததாக வத்துப்பிட்டிவலையைச் சேர்ந்த ஜே. ஏ. நோர்மன் குற்றம் சாட்டப்பட்டு உள்ளார்.

முறைப்பாட்டுக்காரர் தொடர்ந்து சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது:-

"இரண்டாவது எதிரி வத்துப்பிட்டிவல ஆஸ்பத்திரிக்கு இடமாற்றம் பெற்று வந்த போது அவர் எனது மாமி வீட்டில் தங்கி இருந்தார். நானும் அங்கு வந்து செல்வதால் விரைவில் நாங்கள் ஒருவரோடு ஒருவர் பேச ஆரம்பித்தோம்.

"பின்னர் இது காதல் விவகாரமாக வளர்ச்சி அடைந்தது. நாங்கள் கணவன்—மனைவி போலும் நடந்து கொண்டோம்.

"நான் கர்ப்பிணியாகி விட்டதாக அவரிடம் சொன்னபோது அவர் என்னைத் திருமணம் செய்வதாக எழுத்து மூலம் உறுதி அளித்தார்."

இவ்வாறு சாட்சி கூறினர். (ஐ)

### இருபஸ்கள் மோதி 13 பேர் காயம்

மாத்தளை, ஜூலை 21

இ- போ- ச- பஸ் ஒன்றும் தனியார் பஸ் ஒன்றும் விபத்துக்குள்ளாகியதால் 13 பேர் காயமடைந்தனர்.

மாத்தளை — அனுராதபுரம் பாதையில் அரங்கல என்ற இடத்தில் நேற்று இந்த விபத்து நடைபெற்றது.

தனியார் பஸ்ஸின் சாரதி மார்ட்டின் ஆபத்தான நிலையில் இருப்பதாய் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### கடற்படை அதிகாரியை காணவில்லை

வர்த்தக நிர்வாகத் துறையில் பயிற்சி பெறுவதற்காக அமெரிக்காவுக்குச் சென்ற ஓர் உயர்தர கடற்படை அதிகாரியின் இருப்பிடத்தை அரசாங்கத்தால் அறிய முடியாமல் இருக்கிறது.

பயிற்சியைக் கைவிட்டு நாடு திரும்புமாறு பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு இவருக்கு அறிவித்திருந்தது. இம்மாதம் 10-ம் திகதி இங்கு வந்து சேர வேண்டிய இவரை இன்னும் காணவில்லை. (ஐ)

### ரஷ்யராவுக்கு நோபல் பரிசு

பாரிஸ், ஜூலை 21

சோவியத் எழுத்தாளர் அலெக்சாண்டர் சோஹிநெட்ஸின்னுக்கு நோபல் பரிசு வழங்கப்பட வேண்டும் என்று சுமார் 100 பிரெஞ்சு நூலாசிரியர்களும், கலைஞர்களும் தெரிவித்துள்ளனர்.

பிரஸ்தாப எழுத்தாளர் செய்துள்ள வேலைகளுக்காக பரிசு அவருக்கு வழங்கப்பட வேண்டும் என்று நோபல் பரிசுக் கமிட்டிக்கு அவர்கள் எழுதியுள்ளனர். (ஐ)

### பெண்ணின் கையைப்பிடித்தாரை நையப் புடைத்து விரட்டல்

காத்தான்குடி, ஜூலை 21

பஸ்ஸில் இருந்த பெண்ணின் கையைப் பிடித்த வாலிபரை நையப் புடைத்து ஓடோட விரட்டினர் அந்த பஸ்ஸின் சாரதி.

இந்தச் சம்பவம் வாழைச்சேனையில் கதிர்காமம் புறப்படுவதற்கு இருந்த பஸ்ஸில் நடைபெற்றது.

சம்பவத்தன்று இரவு 7-30 மணியளவில் மட்டக்களப்புக்குப்போக இருந்த பஸ்ஸை எதிர்பாராதவிதமாக கதிர்காமம் புறப்படும்படி அறிவிக்கப்பட்டது. அந்த பஸ்ஸில் மட்டக்களப்பு பிரயாணிகள் டிக்கட்டுகளும் வாங்கிக்கொண்டு அமர்ந்திருந்தனர்.

இந்த வேளையில் தெருவில் மது போதையில் நின்ற ஒரு வாலிபர் ஓடி வந்து பிரஸ்தாப பஸ்ஸில் ஏறினர். வாழைச்சேனையைச் சேர்ந்த இவர் பஸ்ஸில் இருந்த மட்டக்களப்புப் பெண்மணி ஒருவரின் கையைப்பிடித்துக் கலாட்டா செய்தார்.

இதைக் கண்ட பஸ் சாரதி வாலிபனைத் தடுத்துப் பெண்ணைக் காப்பாற்ற முனைந்தார். இதனால் ஆத்திரம் கொண்ட வாலிபர் சாரதியை தாக்கி உள்ளார்.

உடனே சாரதி, அந்த வாலிபனை நையப் புடைத்து ஓடோட விரட்டினராம். (ஐ-135)

### கார்-ரயில் விபத்து இருவர் மரணம்

புத்தளத்திலிருந்து நேற்றுக் காலை கொழும்புக்கு வந்த ரயிலுடன் மோட்டார் கார் ஒன்று மோதியதால் காரிலிருந்த இருவரும் இறந்து விட்டனர்.

பங்காதெனியவில் உள்ள துங்கத்தானையில் ரயில் கடவை ஒன்றிலேயே விபத்து நிகழ்ந்தது.

புத்தளம் பகுதியில் சமீப காலத்தில் பாதுகாப்பற்ற ரயில் கடவையில் நடந்த இரண்டாவது மோட்டார் விபத்து இதுவாகும்.

முந்திய பஸ் விபத்தில் 14 பேர் மாண்டனர். பலர் காயமடைந்தனர். பஸ் சுக்குநூறாகியது. (ஐ)

### சிவலோகநாதன் மரணம்: பிரதமருக்கு தந்தை மகஜர்

காரைநகர், ஜூலை 21

ஒட்டிச்சுட்டானில் விவசாயப் படை வீரராகக் கடமை புரிந்த சு. சிவலோகநாதனின் மர்ம மரணத்தை மீண்டும் விசாரணைக்கு எடுத்து நீதி வழங்குமாறு பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு காலஞ் சென்றவரின் தந்தை திரு. ஏ. சுப்பிரமணியம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பிரதமருக்கு அவர் அனுப்பிய மகஜரில், "தாங்கள் நீதியைக் கடைப்பிடித்து மக்களின் முறையீடுகளைக் கவனிப்பதாலேயே ஆட்சியைக் கைப்பற்ற முடிந்துள்ளது. எனது மகனின் மர்ம மரணத்தை மீண்டும் தாங்கள் பூரண விசாரணை நடாத்தி எனக்கு நீதி வழங்குவீர்களானல் மேலும் தங்கள் அரசின் புகழ் ஓங்குவதோடு அல்லாமல், அரசு, நீதி வழங்கியது என்ற பெயரையும் தட்டிக் கொள்ளும்.

"எனது மகனின் மர்ம மரணத்தை ஒட்டிக் கடும்நடவடிக்கை எடுக்குமாறு சாவகச்சேரி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினம் நாடாளுமன்றத்தில் பேசும்போது கூறியுள்ளார் என்பதையும் நினைவூட்ட விரும்புகிறேன்" என்று அவர் குறிப்பிட்டு உள்ளார். மேலும் இது விஷயத்தில் நீதி வழங்க உதவுமாறு தபால், தந்தி அமைச்சர், திரு. செ. குமாரசூரியர், நாடாளுமன்ற நியமன அங்கத்தவர் திரு. எம். சி. சுப்பிரமணியம் ஆகியோருக்கும் அவர் முறையிட்டுள்ளார். (ஐ-132)

### கிடையாது

கடந்த நவம்பர் மாதத்தின் பின்னர் கொழும்பிலுள்ள மதுபானக் கடைகளில் கலால் பகுதியினர் எதுவிதமான சோதனைகளையும் மேற்கொள்ளவில்லை. (ஐ)

### பிரி. நிதி மந்திரி காலமானர்

லண்டன், ஜூலை 21

பிரிட்டிஷ் நிதி மந்திரி திரு. ஐயன் மெக்லியோர்ட் கடந்த இரவு மாரடைப்பால் மரணமானர்.

தனது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இவர் மரணமானர் என்பதை பிரதம மந்திரி திரு. எட்வேர்ட் ஹீத் இன்று அதிகாலை அறிவித்தார்.

56 வயதுடைய இவர் நேற்றிரவு படுக்கைக்குச் செல்ல ஆயத்தமானபோது நோய்வாய்ப்பட்டார். 1941-ம் வருடம் திருமணமான இவருக்கு ஒரு புதல்வனும் புதல்வியும் இருக்கின்றனர். (ஐ)


தொழிலா? வியாபாரமா? காதலா?

**கவலை வேண்டாம்...**

உங்கள் பிரச்சினை எதுவானாலும் சரி, உங்கள் வாழ்க்கை மறுமலர்ச்சியடைந்து, வியாபாரத்தில் லாபம் பெற்று தொழிலில் உயர்வடைந்து, வாழ்க்கையில் வெற்றியடைந்து குடும்பத்தின் தொல்லை நீங்கி வாழ்நாள் எல்லாம் இன்புற்று வாழ தினமும் காலையிலும், மாலையிலும் உங்கள் வீட்டிலோ கடையிலோ

**ஸ்ரீ ராம வாசனைப் புகையை**

தவருது பாவித்து பலன் அடையுங்கள்.

ஒரு மாத பாவனைக்கு ரூ. 3-25

மூன்று மாத பாவனைக்கு ரூ. 7-50

வி- பி- பி- ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பரீட்சை, பந்தயம், வழக்கு மற்றும் செல்லும் இடமெல்லாம் வெற்றியை தரவல்லது.

**ஸ்ரீ சரஸ்வதி இராச யந்திரம்**

(விலை ரூ. 15/50 மட்டுமே)

வேறு எந்த காரணமாயிருந்தாலும் முழு விபரங்களையும் எமக்கு எழுதி தவருத நிவர்த்தியைப் பெறுங்கள். வசியம் சம்பந்தப்பட்ட விஷயங்கள் விசேஷமாக கவனிக்கப்படும். காதலில் வெற்றி, பெற்றோரின் விருப்பம், நிச்சயமாக பெற்றுக் கொடுக்கப்படும். இருவர் பெயர்களுடன் இலவச விபரங்கட்கு எழுதுங்கள்.

அரசாங்க அனுமதிபெற்ற
மகா மாந்திரீகர்

**நீலன் கந்தசாமி,**

லக்ஸல கட்டிடம், நிட்டம்புவ.


### விழுந்த மனிதனை பஸ் இழுத்துச் சென்றது

பொது மக்களுடன் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றி இலங்கை போக்குவரத்து சபை அதன் கண்டக்டர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டியதன் அவசியத்தை கொழும்பு மாநகரத் திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எதுர்ட்டன் பி. வீரக்கோன் நேற்று முன்தினம் சுட்டிக் காட்டினர்.

கல்கிசை, வட்டரப்பொலை வீதியைச் சேர்ந்த ஏ. மிராண்டோ (வயது 70) என்பவரின் மரணம் குறித்து நடத்திய விசாரணையின் போதே அவர் இதைச் சொன்னர்.

"காலஞ்சென்றவர் பஸ்ஸில் ஏறும் போது கண்டக்டர் மணியை அடித்தார். காலஞ்சென்றவரின் ஒரு கால் மிதிபலகையில் இருந்தது. அவர் பஸ்ஸில் இருந்து வீதியில் விழுவதற்கு முன் சில அடி தூரம் இழுத்துச் செல்லப்பட்டார்." என்று அதே பஸ்ஸில் பிரயாணம் செய்த எச். டி. குணரத்தின மரண விசாரணையில் சாட்சியம் அளிக்கையில் கூறினர்.

உடனடியாக பஸ் நிறுத்தப்பட்டு காலஞ்சென்றவர் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டு உள்ளார். அங்கு அவர் சில தினங்களின் பின் காலமானர்.

விபத்து மரணம் என்று மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பக் கட்டுப்பாட்டுக்குப் பதில்

# தாய், சேய் நலம் பேணத் தீர்மானம்

**மலையக மக்களும் பயன் பெற முதல் முறை வாய்ப்பு**

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய ஒன்றெனக் கருதாது, தாயினதும் சேயினதும் நலன் கருதி, தாயின் உடல் நலத்தையும் பேணிக் கொள்வதற்கான ஆலோசனைகளைப் பெற்றோர் பெறுவதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்று நேற்று கூடிய மந்திரிசபையில் தீர்மானிக்கப்பட்டது.

நகரங்கள், கிராமப்புறங்கள், தோட்டப் பகுதிகள் முதலான இடங்களில் வாழும் பெற்றோருக்கு இந்த வசதிகள் கிட்டும்.

பத்து லட்சம் தோட்டத் தொழிலாளர்களில் ஒரு பெரும் பகுதியினருக்கு தாய், சேய் சுகாதார வசதிகள் இதற்கு முன் என்றுமே கிடைத்ததில்லை. வெளி நாடுகளில் இருந்து கிடைக்கும் உதவியில் நியாயமான ஒரு பகுதி இந்தப் பெற்றோர்களுக்கு மேற்சொன்ன வசதிகளைச் செய்து கொடுக்கப் பயன்படுத்தப்படும்.

இந்தப் பணியை தாய், சேய் சுகாதாரச் சபை செய்யும்.

இந்தத் தேவைகளுக்கு சுவீடன் போன்ற நாடுகள் அளித்து வரும் உதவி குறித்து மந்திரிசபை மகிழ்ச்சி தெரிவித்தது. (ஐ)

## சுவீப் முடிவுகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலா ரூபா 440-95 ஆறுதல் பரிசு பெறும் நூறு டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:-

A
09 A 0411 — 34 A 0155

B
15 B 0668 — 28 B 0053
26 B 0658

C
16 C 0411 — 29 C 0147
33 C 0849 — 03 C 0696
31 C 0589

D
25 D 0836 — 01 D 0927
14 D 0299

E
36 E 0334 — 01 E 0656
37 E 0613 — 10 E 0365
37 E 0613 — 10 E 9365
28 E 0411 — 23 E 0438

F
18 F 0968 — 16 F 0711
10 F 0528 — 21 F 0203

G
36 G 0056

H
15 H 0392 — 36 H 0381
06 H 0822 — 36 H 0706
01 H 0102 — 35 H 0592

J
36 J 0818 — 19 J 0432
17 J 0569 — 32 J 0593
15 J 0019 — 27 J 0761..

K
09 K 0905

L
07 L 0671 — 22 L 0387

M
26 M 0255 — 30 M 0096
16 M 0705 — 04 M 0222
26 M 0267

N
20 N 0141 — 21 N 0895
10 N 0086 — 36 N 0551

O
30 O 0687 — 10 O 0415
16 O 0179 — 28 O 0911

P
23 P 0030 — 24 P 0913
12 P 0260 — 22 P 0548
20 P 0299

Q
35 Q 0242 — 02 Q 0795
30 Q 0333 — 12 Q 0752
37 Q 0355 — 31 Q 0150
34 Q 0489 — 37 Q 0201

R
21 R 0457 — 10 R 0810
21 R 0933 — 04 R 0856
29 R 0332 — 01 R 0995

S
07 S 0023 — 03 S 0725
17 S 0890 — 15 S 0071

T
12 T 0678 — 03 T 0238
11 T 0152

U
33 U 0317 — 37 U 0507
12 U 0407

V
16 V 0161 — 02 V 0984
34 V 0767 — 24 V 0349
11 V 0298 — 19 V 0871
03 V 0349

W
34 W 0572 — 29 W 0101

X
13 X 0123 — 02 X 0372

Y
21 Y 0385 — 29 Y 0081
04 Y 0111 — 19 Y 0118
07 Y 0082 — 07 Y 0319

Z
14 Z 0162 — 26 Z 0498

## திரைப்படக் கூட்டுத்தாபனம்

அரசாங்க திரைப்படக் கூட்டுத்தாபனம் ஒன்றை அமைக்கும் யோசனை ஒன்றை மந்திரி சபை கொள்கை அளவில் அங்கீகரித்துள்ளது. (ய)

## உதவி மந்திரியைக் குழு சந்தித்தது

காரைநகர் முன்னேற்ற மன்றத் தூதுகோஷ்டி ஒன்று உதவி போக்குவரத்து மந்திரி திரு. ரி. சி. எம். ஹேரத்தைச் சந்தித்து, காரைநகருக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையே சேவையில் ஈடுபடும் பஸ்கள் திட்டமிட்ட நேரத்திற்குச் செல்வதில்லை என்றும், சரியான பெயர்ப் பலகைகளை அவை கொண்டிருக்கவில்லை என்றும் முறையிட்டுக் கொண்டது. (ஐ)

## நீரில் மூழ்கி மரணம்

சாய்ந்தமருது, ஜூலை 21

ஆற்றில் நீராடச் சென்ற இனந் தெரியாத ஒரு நபர் நீரில் மூழ்கி இறந்து கிடந்தார். நிந்தவூர் மாவடிப்பள்ளிக் கிராமத்தை அடுத்துள்ள சின்னப்பால ஆற்றில் இது நடந்தது.

பல மணித்தியாலங்களின் பின் பிரேதம் கண்டெடுக்கப்பட்டது. நீந்தத் தெரியாததால்தான் காலஞ்சென்றவர் நீரில் மூழ்கியதாக மரண விசாரணையில் கூறப்பட்டது. நீரில் மூழ்கியதால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (ஜ-281)

## மணிஓடர்களுக்குப் பதில் சேமிப்பு பத்திரங்கள் பாவிப்பு

மணி ஓடர்களுக்குப் பதிலாகப் பலர் சேமிப்புப் பத்திரங்களைப் பாவித்து பணம் அனுப்புவதால் அரசாங்கத்துக்கு வருடாந்தம் பல லட்சம் ரூபா நஷ்டம் ஏற்படுவது கண்டு பிடிக்கப்பட்டு உள்ளது.

மணி ஓடர் கமிஷன் கொடுப்பதைத் தவிர்க்கும் நோக்கத்துடன் மணி ஓடர்களுக்குப் பதில் சேமிப்புப் பத்திரங்கள் அனுப்பப்படுவதாக தேசிய சேமிப்பு இயக்க அதிகாரிகள் சிலர் கண்டு பிடித்துள்ளனர்.

கொழும்பில் வியாபாரம் செய்யும் பல வர்த்தகர்கள் சேமிப்புப் பத்திர இயக்கத்தைப் பயன்படுத்தி வெளியூர்களில் உள்ள தங்கள் வீடுகளுக்குப் பணம் அனுப்பி வருகிறார்கள்.

இந்த வர்த்தகர்கள் என்றுமே மணி ஓடர்கள் வாங்குவதில்லை என்று சொல்லப்படுகிறது. இவர்கள் சேமிப்புப் பத்திரங்களை வாங்கி தமது மனைவிமார்களுக்கு அனுப்பி விடுகிறார்கள்.

உள்ளூர் தபால் நிலையங்களில் சேமிப்புப் பத்திரங்களை மாற்றிப் பணமாக்க முடியும். இதன் மூலம் ஒவ்வொரு 20 ரூபாவுக்கும் 25 சதமாக அறவிடப்படும் மணி ஓடர் கமிஷன் தவிர்க்கப்படுகிறது. (ஐ)

## மக்கள் கமிட்டிப் பிரேரணை வெள்ளை அறிக்கையாகும்

மக்கள் கமிட்டிகள் நிறுவுவது பற்றிய தீர்மானத்தைச் சட்டமாக்குவதற்கு முன் வெள்ளை அறிக்கையாக வெளியிடுவது என்று நேற்று மந்திரி சபை முடிவு செய்தது.

பொது விவகார, உள்ளூராட்சி உள்நாட்டு அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டார நாயக்கா மக்கள் கமிட்டிகள் பற்றி மந்திரி சபையில் சமர்ப்பித்த ஒரு பிரேரணையை மந்திரிசபை பரிசீலனை செய்த பின்னரே மேற்கண்ட முடிவை எடுத்தது. (ஐ)

## 100 பிரயாணிகளோடு வந்த விமானத்தின் டயர் வெடிப்பு

பம்பலப்பிட்டி வஜிராராம விகாரையைச் சேர்ந்த வண. பியதஸ்ஸி உட்பட நூறுக்கு மேற்பட்டோரை ஏற்றிக் கொண்டு பாங்கொக்கில் இருந்து கொழும்பு நோக்கி வந்து கொண்டிருந்த விமானத்தின் டயர் ஒன்று ஆகாயத்தில் வெடித்தது. பாங்கொக் விமான நிலையத்தில் இருந்து விமானம் மேலே கிளம்பிச் சற்று நேரத்தில் நடந்த அந்த சம்பவத்தால் பிரயாணிகள் மிகுந்த அச்சமும் அதிர்ச்சியும் அடைந்துள்ளனர்.

விமானங்களின் டயர்கள் ஒருபோதும் ஆகாயத்தில் வெடிப்பதில்லை. மேலே கிளம்பும் போதும் இறங்கும் போதும் தான் வெடிப்பதுண்டு. எனவே இது மிகவும் அபூர்வமான சம்பவம் என்று சொல்லப்படுகிறது.

கடுமையான சுகயீனம் காரணமாக சைகோனில் சிகிச்சை பெற்று வரும் பம்பலப்பிட்டி வஜிராராம விகாரையைச் சேர்ந்த வண. நாரத மகா தேரோவைப் பார்த்து விட்டு வண. பியதஸ்ஸி இலங்கை திரும்பிக் கொண்டிருந்தார்.

பாங்கொக் விமான நிலைய அதிகாரிகள் விமானத்தைப் பாதுகாப்பாக இறங்கச் செய்து திருத்தங்களை செய்தனர். இதனால் விமானம் தாமதித்தே வர முடிந்தது.

கட்டுநாயக்காவில் 20-ம் தேதி இரவு இறங்க வேண்டிய விமானம் நேற்றுக் காலையிலேயே வந்து சேர்ந்தது. (ஐ)

## இந்த வருட இறுதிக்குள் குடியரசாகும்?

"இந்த வருட முடிவுக்குள் நாம் ஒரு சோஷலிஸ சுதந்திரக் குடியரசு நாட்டின் மக்கள் என்பதை உலகுக்குத் தெரியப்படுத்தலாம் என்று சொல்லி வைக்க விரும்புகிறேன்" என டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா, அரசமைப்பு நிர்ணய சபையில் நேற்றிரவு தெரிவித்தார்.


## மணிப்புரி சாரிகள்



"மணிப்புரி" சாதியைச் சேர்ந்த மிக விலை உயர்ந்த சாரிகளைக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள முடியும். அழகான கண்கவர் சித்திர வேலைகளைக் கொண்ட இச்சாரிகள் நீங்கள் விரும்பும் எல்லா வர்ணங்களிலும் பெற்றுக் கொள்ள முடியும். கைதேர்ந்த சித்ரக் கலைஞர்களாலும், வல்லுநர்களாலும் இந்திய கலாபவனத்தில் நடாத்தப்பெற்ற சித்திரக் கண்காட்சியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மனங்கவரும் சித்திர வேலைப்பாடுகளே இச் சாரிகளில் பொருந்தியுள்ளன.

**ஒரு சாரியின் விலை ரூபா 29-50 மாத்திரமே.**
ஒவ்வொரு சாரியுடனும் ஒரு சட்டைத் துணியும் கவர்ச்சியான ஒரு பிரேஸியரும் இலவசமாக அனுப்பப்படும்.
தபால் செலவு இலவசம்.

இது சாயம் மாறாது. நீண்ட காலம் பாவிப்பதோடு எந்தவொரு சவர்க்காரத்திற்கும் தரம் மாறாதது. ஸ்திரிக்கை செய்ய வேண்டியதில்லை. இதன் அழகான தரமும், குன்றாத தோற்றமும் உங்கள் மேனியழகை மென்மேலும் அழகுறச் செய்கின்றது. எனவேதான் இதனைப் பிரபல நடிகைகளும் அணிகின்றார்கள்.

பாடசாலைகளுக்கும் வேண்டிய உற்சவங்களுக்கும் ஏற்ற இந்த சாரியை வாங்குவதற்கு இன்றே நீங்கள் விரும்பும் நிறத்தைக் குறிப்பிட்டு ஒரு தபாலட்டை மூலம் தெரிவிக்கவும். வி. பி. பி. V.P.P. மூலம் அனுப்பி வைக்கப்படும். (பிரேஸியர் அளவுகளை அனுப்புங்கள்.) தயவு செய்து உங்கள் விலாசத்தை தெளிவாக எழுதுங்கள்.

The Manager
**ANESCO AGENCIES (TH)**
191/1, High Level Road, Kirillapone Colombo 6.



இப் பத்திரிகையை அச்சிட்டவர் சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேனமாவத்தை, கொழும்பு - 12 (இலங்கை). வெளியீட்டு திகதி 22 ஜூலை 1970.
Thanthi, 5, Gunasena Mawatha, Colombo 12.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org